**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 53/2024 |
| Name | : Natarajan |
| P.W. | : 5 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 14.08.2025

**1ம் எதிரி எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில்லை 355 BNSS ன் படி மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது.**

**2 முதல் 12 எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தளி காவல் நிலைய உதவி ஆய்வாளராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்று தற்போது உடுமலையில் வசித்து வருகிறேன். கடந்த 19.12.2020 ம் தேதி கணியூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது அதிகாலை 02.00 மணிக்கு ரா.சீனிவாச சம்பத் தக்கார் அருள்மிகு கரிவரதராஜ பெருமாள் திருக்கோவில் துங்காவி மலையாண்டிபட்டிணம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரைப் பெற்று கணியூர் காவல் நிலைய குற்ற எண்.713/2020 இதச பிரிவுகள் 143, 447, 353, 506(1) ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அசல் புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையை இணைத்து மடத்துக்குளம் மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கும் அதன் ஒரு நகலை மேல் விசாரணைக்கு காவல் ஆய்வாளரின் பார்வைக்கு வைத்தேன். இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சமயத்தில் இருந்து சுமார் 7 ½ மணி நேரம் தாமதமாக காவல் நிலையத்தில் புகார் தரப்பட்டது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லும் இடம் காவல் நிலையத்தில் இருந்து சுமார் 7 கி.மீ துாரத்தில் உள்ளது சுமார் 10 நிமிடங்களில் வந்துவிடலாம் என்றால் சரிதான். காலதாமதத்திற்கான காரணம் குறித்து புகாரில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். புகாரில் எதிரிகள் அடையாளம் ராசப்பன் என்பவர் சொல்லியுதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகாரில் யார் கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 கொடுத்த பொய்யான புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

Sd/–Thiru.M.Dheenadhayalan, B.A., B.L.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்